# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 277 | சனி, மார்ச் 09, 2024 | 12 பக்கங்கள்




# ரணிலை ஆதரிப்பதில் பிளவுபடும் மொட்டு?

அகிலன்

# சாந்தனின் சாவுக்கு யார் பொறுப்பு?



தியாகு: பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்



# அணுவாயுதப்போர் தப்பிக்க வழி என்ன?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

## யாழ். இந்திய துணைத் தூதரகத்தை முடக்கி தொடர் போராட்டம்



எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்திற்கு முன்பாக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து தூதரகத்தின் செயல்பாடுகளை முடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என வடக்கு மீனவ கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் தலைவர் பாக்கியநாதன் றேகன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை(6) யாழ் மாவட்ட மீனவ அமைப்புகளின் சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து மீன் வளத்தை அழிக்கின்றார்கள்

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பிக்குள் நுழைந்து தடை செய்யப்பட்ட ரோலர் வலைகளைப் பயன்படுத்தி மீன் வளத்தை அழிக்கின்றார்கள் என கிண்ணியா மீனவ சங்கங்களின் சமாஜத் தலைவர் ரீஜால் பாயிஸ் தெரிவித்தார். கிண்ணியாவில் கடந்த செய்வாய்கிழமை(05) மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில் இதனால் இலங்கை மீனவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி



வருகின்றார்கள். உடனடியாக இச் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும்.

வட மாகாணம் யாழ்ப்பாணம் கிழக்கு மாகாண பிரதேசங்களில் மீனவர்கள் பாதிக்கப்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## வடக்கு கிழக்கு மக்கள் பிரச்சினையில் அரசாங்கம் கள்ள மௌனம்



வடக்கு, கிழக்கில் மக்களின் பிரச்னைகளுக்கு பதில் அளிக்காமல் அரசாங்கம் கள்ள மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது என்று தேசிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தக் கட்சி நடத்திய மகளிர் தின நிகழ்வில் பங்கேற்ற தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று பேரவை உறுப்பினர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களுக்கு தொழில்வாய்ப்புகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. இந்த மக்களின் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. நில ஆக்கிரமிப்பு தொடர்கிறது. விவசாயக் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அதைப் போல, இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையில் சிக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கில் காணிப் பிரச்னை, காணாமலாக்கப்பட்டோர் பிரச்னை, கணவனை இழந்த பெண்கள் முகம்கொடுக்கின்ற

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## சுயாட்சியை பறித்த பின்னர் காஸ்மீர் சென்ற மோடி

கடந்த 2019 ஆம் ஆண்டு காஸ்மீருக்கு வழங்கப்பட்ட காணி மற்றும் வேலைவாய்ப்புக்கள் தொடர்பான சுயாட்சி அதிகாரத்தை இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு அகற்றிய பின்னர் கடந்த வியாழக்கிழமை மோடி அங்கு முதல் முதலாக பயணம் மேற்கொடுள்ளார்.

சிறீநகர் பகுதியில் உள்ள உதைபந்தாட்டமைதானத்தில்மிகப் பெரும் பாதுகாப்புடன் பேசிய மோடி அபிவிருத்திப் பணிகளை அதிகளவில் அங்கு மேற்கொள்ளப் போவதாக தெரிவித்துள்ளார்.

முஸ்லீம்களை அதிகளவில்





கொண்ட லடாக் மற்றும் ஜம்மு காஸ்மீர் பகுதிக்கான சுயாட்சி அதிகாரத்தை கடந்த 2019 ஆம் ஆண்டு பறித்த இந்திய மத்திய அரசு அதனை இரண்டாக பிரித்து மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்திருந்தது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## அமெரிக்க கப்பல் மீது தாக்குதல்– மூவர் பலி

ஏமனின் ஹதீஸ் அமைப்பினர் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட நிறுவனத்தின் சரக்கு கப்பல் மீது கடந்த புதன்கிழமை(6) மேற்கொண்ட தாக்குதலில் கப்பல் கடுமையான சேதமடைந்ததுடன், 3 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் மத்திய கட்டளை மையம் தெரிவித்துள்ளது.



காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களுக்கு பதிலடியாக கடந்த நவம்பர் மாதம் முதல் செங்கடல் பகுதியில் இஸ்ரேலிய கப்பல்களுக்கு எதிராக தாக்குதல்களை நடத்திவந்த ஹதீஸ் அமைப்பினர் கடந்த ஜனவரி மாதம் பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஹதீஸ் அமைப்பினர் மீது மேற்கொண்ட வான் தாக்குதல்களைத் தொடர்ந்து அவர்கள் தற்போது அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளின் கப்பல்களையும் தாக்கி வருகின்றனர்.

எனினும்அவர்களின்தாக்குதலில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டது இதுவே முதல் தடவையாகும். *True Confidence* என்ற கப்பல் மீது ஏடன் வளைகுடாவில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர். கப்பல் கடுமையாக சேதமடைந்ததுடன், கடலில் மூழ்கும் நிலையையும் அது எட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் கப்பலை கைவிட்டு கடலில் குதித்த 23 பணியாளர்களை அருகில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்படைக் கப்பல் காப்பாற்றியுள்ளது.

பிரித்தானியாவின் றுபிமார் என்ற கப்பலையும் கடந்த வாரம் ஹதீஸ் அமைப்பினர் தாக்கி மூழ்கடித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பாவில் மிகப்பெரும் அணுவாயுத விபத்து ஏற்படலாம் – ஐ.நா




உக்ரைனின் சப்ரோசியா பகுதியில் உள்ள ஐரோப்பாவின் மிகப்பெரும் அணுஉலையில் விபத்துக்கள் ஏற்படும் சாத்தியங்கள் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி அமைப்பின் தலைவர் ரபேல் குறோஸி கடந்த புதன்கிழமை(6) தெரிவித்துள்ளார்.

ரஸ்யாவின் கோசி பகுதியில் ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டினை சந்தித்தபின்னர்அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். சப்ரேசியா பகுதியில் உள்ள அணுஉலையை சுற்றியுள்ள களநிலமைகள் மோசமாகி வருகின்றன. உக்ரைன்-ரஸ்ய மோதல்கள் தொடர்ந்து இடம் பெறும்வரையில் இந்த அணு உலையின் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியானதே.

அணுஉலை உள்ள பகுதியில் தாக்குதல் நடத்தவேண்டாம் என உக்ரைன் அதிபர் செலன்ஸ்கியை எச்சரிக்கவில்லை நான் எல்லா தரப்பினரையும் தான் எச்சரிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உக்ரைன்-ரஸ்ய மோதல்கள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## சீனாவில் அப்பிள் தொலைபேசிகளின் விற்பனையில் பாரிய வீழச்சி

சீனாவில் அப்பிள் கையடக்க தொலைபேசியின் விற்பனையில்பாரியசரிவுஏற்பட்டுள்ளதுடன், சீனாவின் தயாரிப்பான கூவாவேவ் தொலைபேசி விற்பனை அதிகதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் முதல் 6 கிழமைகளில் அப்பிள் தொலைபேசிகளின் விற்பனை 24 விகித சரிவை சந்தித்துள்ளது. அதேசமயம், கூவாவேவ் தொலைபேசியின் விற்பனை 64 சதவிகித அதிகரிப்பை கண்டுள்ளது.

அமெரிக்காவின் மிகப் பெரும் தொழில்நுட்ப நிறுவனமான அப்பிள் நிறுவனம் சீனாவின் உள்ளூர் கூவாவேவ் நிறுவனத்துடன் கடும் போட்டியை சந்தித்துள்ளதை இது காட்டுவதாக இந்த ஆய்வை மேற்கொண்ட *Counterpoint* என்னும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அப்பிள் நிறுவனத்தின் மிகப் பெரும் சந்தைவாய்ப்பில் சீனாவும் ஒன்று எனினும் அண்மைக் காலமாக சீனாவில் தொலைபேசிகளின் விற்பனை 7 விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

அப்பிள் நிறுவனத்தின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## வெடுக்குநாறி மலையில் பதற்றம்: நாடாளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதல்!

வெடுக்குநாறி மலையில் இன்றையதினம் [08] பூஜை வழிபாடுகள் நடைபெற்று வரும் நிலையில் மாலை வேளையில் பதற்ற நிலை சற்று அதிகரித்துள்ளதுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தாக்குதல் சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

இதன்போது அங்கு பூஜை வழிபாடுகளை மேற்கொண்டிருந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளீட்ட பலர் கைதுசெய்யப்பட்டிருந்ததுடன் வழிபாடுகளில் கலந்துகொண்ட பெண்களையும் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி உற்சவம் நடைபெற்றுகொண்டிருந்த நிலையில் பொலிஸார் மாலை ஆறுமணியுடன் அனைத்து வழிபாடுகளையும் முடிவுக்கு கொண்டுவருமாறு தெரிவித்திருந்தனர்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## சிறிய குளங்களை ஒன்றாக்கி மின்சாரம் பெறும் திட்டத்துக்கு அனுமதி

**கலாநிதி சிவகுமார் சுப்பிரமணியம்**
**முன்னாள் தலைவர், பொறியியல்பீடம்**
**யாழ் பல்கலைக்கழகம்**

11 சிறிய குளங்களை இணைத்து பூநகரிக் குளமாக்குதலும் 700 மெகாவாட்ஸ் மின்சாரம் பெறும் மிகப்பெரிய திட்டம் நடைமுறைப்படுத்த மாவட்ட அபிவிருத்திக் குழு அங்கிகாரம் வழங்கியுள்ளது.



இன்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலே முன்மொழியப்பட்டு அமைச்சரவை அனுமதித்த திட்டம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 சிறிய குளங்களை ஒன்றாக இணைத்து பூநகரி குளம் அமைக்கப்படவுள்ளது. 2013ம் ஆண்டளவில் இத்திட்டம் நீர்பாசன திணைக்களத்தால் முன்மொழியப்பட்டது. ஆனாலும், நாட்டில் ஏற்பட்ட

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ஈழத்தமிழரின் இறைமையை முன்னெடுக்காது ஈழத்தமிழர்கள் அரசியல் செய்வது மாற வேண்டிய நேரம்

'இலங்கையில் நல்லிணக்க செயற்பாடுகள் காணப்படும்போது இரண்டு தீவிரப்போக்குகள் காணப்படுவதை நாங்கள் காண்கின்றோம். ஒரு தரப்பினர் குறைந்தளவு அதிகாரப் பரவலாக்கலை கூட ஏற்கத் தயாரில்லை இன்னுமொரு தரப்பினர் தீவிரவாத போக்குடையவர்கள் புலம் பெயர் தமிழர்கள் அவர்கள் தனிநாட்டைக் கோருகின்றனர். இந்த இருதரப்பினருக்கும் மத்தியில் சமநிலையைக் காண்பதற்குப் பிரித்தானியா உதவமுடியுமா? எனப் பிரித்தானியாவின் சிறிலங்காவுக்கான தூதுவர் அன்ரூ பற்றிக் அவர்கள் டெய்லி மிரர் ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் கேள்வி கேட்கப்பட்டது. இந்தக் கேள்விக்கு "இலங்கை மக்களிடம் பேசுவதே முதல் விடயம் என நான் தெரிவிப்பேன். எவரும் தனிநாடு குறித்து இலங்கைக்குள் பேசுவதை நான் காணவில்லை-செவிமடுக்கவில்லை-விவாதங்களையும் காணவில்லை. 13வது திருத்தம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. அதிகாரப் பரவலாக்கல் என்றால் என்ன என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. 13வது திருத்தம் மூலமான குறிப்பிட்ட அளவு அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய ஐக்கிய இலங்கை என்பதிலேயே எதிர்காலம் தங்கியுள்ளது என்பதே இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றை உள்ளடக்கிய நாடுகளின் நிலைப்பாடாக உள்ளது" எனப் பிரித்தானியத் தூதுவர் பதிலளித்துள்ளார். இதன்வழி பாரத் லங்கா கூட்டாண்மையின் முடிவுகளே ஈழத்தமிழரின் இறைமையை மேலும் ஒடுக்கும் முறையில் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கான சமகாலத் தீர்வாக இந்திய அமெரிக்க பிரித்தானிய கூட்டணியால் ஈழத்தமிழர்கள் மேல் திணிக்கப்படும் என்பது தெளிவாகிறது. ஈழத்தமிழரின் அரசியல்வாதிகளும் புலம்பெயர் நாடுகளில் உள்ள ஈழத்தமிழரின் அமைப்புக்களும் ஈழத்தமிழர் இறைமையை முதன்மைப்படுத்தாது அரசியல் செய்து வருவதன் விளைவே இந்திய-அமெரிக்க-பிரித்தானிய கூட்டணியின் இந்த நிலைக்குக் காரணம்.

மேலும் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் ஜெனிவா தீர்மானத்துக்கு அனுசரணை நாடுகளில் ஒன்றான பிரித்தானியாவின் தூதுவரே அவருடைய செவ்வியில், "சிலவேளைகளில் இந்த தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் விதம் குறித்து நான் சிறியளவு கரிசனை கொண்டுள்ளேன். சர்வதேச சமூகம் இலங்கை விடயங்களில் தலையிடுகின்றதாவென" எனக் கூறியுள்ளமையும், "மனித உரிமைகள் நிபுணர்கள் செயற்பாட்டாளர்களிடம் நீங்கள் பேசினால் சிறிலங்காவினர் சீர்திருத்தங்கள், மற்றும் யுத்தத்தின் பாரம்பரியத்திற்கு தீர்வைக் காண்பதற்கான விடயங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பங்களிப்பில் அவர்கள் ஆர்வமாக உள்ளனர் என்கின்றனர். சிறிலங்கா மீது தனது கருத்துக்களைத் திணிப்பது சர்வதேச சமூகமில்லை" எனக் கூறியுள்ளமை, ஈழத்தமிழ் அரசியல் வாதிகளும் புலம்பெயர் நாடுகளில் உள்ள ஈழத்தமிழர் அமைப்புக்களும் இதுவரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்துடன் ஈழத்தமிழர்களுக்காகக் கடும்பணியாற்றினாலும் ஈழத்தமிழர் இறைமையை இவர்கள் முதன்மைப்படுத்தாமையால் சிறிலங்காவின் இறைமைக்குள் வாழும் சமூகமாக ஈழத்தமிழர்களை உலகு பார்க்கும் நிலை தோன்றியுள்ளமை உறுதியாகிறது.

கூடவே "கடந்த செப்டெம்பர் மாதம் ஜெனிவாவில் வெளியான அறிக்கையை வாசித்து பார்த்தால் அது அரசாங்கம் முன்னேற்றம் காண்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறது அதே வேளை இன்னமும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதை வலியுறுத்துகின்றது" என்ற பிரித்தானியத் தூதுவரின் கூற்று இனிமேல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகம் வெளியகப் பொறிமுறைகள் மூலம் அனைத்துலக சட்டத்தைச் சிறிலங்காவில் மனித உரிமைகள் வழிமுறைகளில் செயற்படுத்துவதற்குப் பதிலாக வாய்மொழியளவிலான கண்டனங்கள் நெறிப்படுத்தல்களையே சிறிலங்காவின் உள்ளகப் பொறிமுறைக்கு அளிக்கும் என்பதை எதிர்வு கூறியுள்ளது. இதற்கு உரிய நேரத்தில் மனித உரிமைகள் ஆணையகத்தின் வெளியகப் பொறிமுறைக்கு அனுமதிக்காது சிறிலங்காவின் உள்ளக பொறிமுறைகளுள் தீர்வு என வழிகாட்டிய திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் முதல் இனஅழிப்பு என்பதை வலியுறுத்தக் காலந்தாழ்த்திய அனைத்துலக ஈழத்தமிழர் அமைப்புக்கள் வரை அத்தனைபேருமே பொறுப்பாக உள்ளனர்.

பிரித்தானியத் தூதுவர் இலங்கையில் ஆறுமாதமே பணிபுரியும் புதியவராக இருப்பினும் உண்மையும் நேர்மையுமான முறையில் தான் இலங்கையில் பல ஆண்டுகளாகப் பணிபுரியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் நிபுணர்களுடன் பேசியதில் சிறிலங்காவுக்கு மனித உரிமைகள் ஆணையகம் அனுப்பிய கடிதங்கள் என்பவற்றைப் பார்த்தால் இந்த விடயம் குறித்து போதியளவு கலந்தாலோசனைகள் இடம்பெறவில்லை என்ற கரிசனை காணப்படுவது தனக்குப் புலனாகிறது எனக் கூறியுள்ளார். கூடவே கடந்த காலத்தில் இது தொடர்பாக ஆராய்ந்த குழுக்களின் அறிக்கைகள் வெளியாகவும் இல்லை வெளிப்படுத்தப்படவுமில்லை. நடைமுறைப்படுத்தப்படவுமில்லை. இதனால் அரசாங்கத்தின் இந்த முயற்சிகள் பலனளிக்குமா என்பதில் சமூகத்தில் சந்தேகம் உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர் எனக் கூறியுள்ளார். அத்துடன் பரந்து பட்ட மக்களுடனும் கலந்துரையாடியதில் மக்களது ஆதரவும் இதற்கு இல்லையென உணர்ந்து கொண்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பிரித்தானியத் தூதுவரின் இந்தக் கூற்றைத் தொடக்கப்புள்ளியாக வைத்து ஈழத்து அரசியல்வாதிகளும் புலத்து அமைப்புக்களும் ஈழத்தமிழர்களின் 2009 முதலான கடந்த பதினைந்தாண்டு கால மனித உரிமைகள் வன்முறைகள் குறித்த தரவுகளையும் தகவல்களையும் தொகுத்து வகைப்படுத்தி அவை ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டன என்பதை உறுதி செய்து சட்டவிசாரணைக்கு உரிய ஆவணமாக்கும் பணியிலாவது பொதுவெளியில் இணைந்து பணியாற்றுவார்களானால் அதுவே ஈழத்தமிழர் தங்களின் இறைமையை மீளமைத்தலே அவர்களின் எதிர்கால வாழ்வுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் ஏற்படுத்த வல்ல தீர்வுக்கு இட்டுச் சென்று, 13 ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுக்கான தொடக்கப்புள்ளியாக அமையாது என்பதை உலகுக்கு உணர்த்தும் என்பது இலக்கின் உறுதியான எண்ணம். அத்துடன் ஈழத்தமிழர்கள் ஈழத்தமிழரின் இறைமையை முன்னெடுக்காது அரசியல் செய்வது மாற வேண்டிய நேரம். தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஈழத்தமிழர்கள் கட்சிகளின் தேர்தல் கொள்கை விளக்கத்தில் ஈழத்தமிழரின் இறைமையை மீள்விக்க கட்சிகள் எவ்வாறு உதவுமென கட்சிகளுடன் உரையாடினால் மட்டுமே ஈழத்தமிழரின் இறைமையைச் சிறிலங்கா ஒடுக்குவதைத் தடுக்கலாம்.


**ஆசிரியர்**

# ரணிலை ஆதரிப்பதில் பிளவுபடும் மொட்டு?

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ கொழும்பு திரும்பியுள்ள பின்னணியில் இலங்கை அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நோக்கி நாடு சென்றுகொண்டிருக்கும் நிலையில் "மொட்டு" எனப்படும் பொது ஜன பெரமுனவுக்குள் குழப்பங்கள் உருவாகியிருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே பசில் இலங்கை திரும்பியிருக்கின்றார். தேர்தலை நோக்கமாகக் கொண்டு மொட்டு அணிக்குள் தீவிரமான பிளவுகள் உருவாகியிருப்பது இரகசியமானதல்ல. இந் உள்வீட்டுப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர பசிலால் முடியுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி!




ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடைபெற வேண்டும். அரசியலமைப்பின்படி செப்டம்பர் அல்லது ஒக்ரோபரில் இந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் அநுரகுமார திசாநாயக்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் சஜித் பிரேமதாஸவும் இத்தேர்தலில் போட்டியிடுவார்கள் என்பது மட்டும்தான் இதுவரை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து இரு கட்சிகளின் சார்பில் உத்தியோகபுர்வ அறிவிப்புக்களும் வெளியிடப்பட்டிருக்கின்றது. பரப்புரைகளையும் அவர்கள் ஆரம்பித்துவிட்டர்கள்.



ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கின்ற போதிலும், அந்தக் கட்சியின் சார்பில் அவர் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. கடந்த பொதுத் தேர்தலின் போது சஜித் பிரேதாஸ ஐ.தே.க.வின் பெரும்பகுதியை அரித்துச் சென்றுவிட்டார். பொதுத் தேர்தலில் சந்தித்த பெரும் தோல்வியைத் தொடர்ந்து ஐ.தே.க. புனரமைக்கப்படவில்லை. அதனைவிட, அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டால், ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்களின் வாக்குகளை அவரால் அறுவடை செய்ய முடியாது.

சுயாதீனமான ஒரு வேட்பாளராக "அன்னம்" சின்னத்தில் போட்டியிட ரணில் திட்டமிடுவதற்கு இவைதான் காரணம். அன்னம் சின்னம் குறித்து இதுவரையில் அதிகார மட்டத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால், ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்கள் இது தொடர்பாக ஆராயப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றன.

"பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காத்தவர், எதிர்காலத்திலும் ரணில் இருந்தால்தான் பொருளாதாரத்தை ஸ்திரமாகக் கொண்டு செல்ல முடியும்" என்ற நம்பிக்கையை வலுப்படுத்துவதன் மூலமாகவே மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கான உபாயங்களை ரணில் வகுத்துவருகின்றார். ரணிலை முன்னிலைப்படுத்தும் சக்திகளும் இதனைத்தான் பிரச்சாரப்படுத்தி வருகின்றன. உண்மையில், அதனை விட்டால் அவர்களிடம் வேறு எதுவும் இல்லை.

ரணிலைஆதரிப்பதில்ஐ.தே.க.வைவிடவும் மொட்டு அணியிலுள்ள ஒரு பிரிவினர் தீவிரமாக இருக்கின்றார்கள். மொட்டுவுக்குள் இன்று உருவாகியிருக்கும் நெருக்கடிக்கு இந்த அணிதான் காரணம். பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் கோட்டையாக விளங்கிய கம்பஹா மாவட்டத்தில் உள்ள மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலான உறுப்பினர்கள் ரணிலின் ஆதரவாளர்களாகியுள்ளார்கள். மொட்டுச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டு சபைக்கு தெரிவான 13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐவர் மாத்திரமே தற்போது மொட்டுக் கட்சி பக்கம் நிற்கின்றனர்.

13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் கம்பஹா மாவட்ட தலைவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அமைச்சர் நளின் பெர்ணான்டோ, இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே களமிறங்க வேண்டும் எனவும் அவர்கள் பகிரங்கமாகவே அறிவித்து வருகின்றனர்.



மக்களுடைய உணர்வுகளின் அடிப்படையில்தான் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை அவர்கள் எடுத்துள்ளார்கள். மொட்டு அணி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எந்தவொரு நிலைப்பாட்டையும் இதுவரையில் அறிவிக்கவில்லை. ஆனால், ரணிலை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை எடுப்பது கட்சியின் எதிர்காலத்தைப் பாதிப்பதாக அமையும் என பசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் தெரிவித்து வருகின்றார்கள். தமது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்பது அவர்களுடைய நிலைப்பாடு. ரணிலை எழுந்தமானத்துக்கு ஆதரிப்பதற்கு அவர்கள் தயாராகவில்லை.

மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய அரசியல்

**அகிலன்**

அனுபவத்தின் அடிப்படையில் இவ்விடயத்தில் நிதானமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க முற்படுகின்றார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த அரகலய இப்போது ஓய்ந்திருந்தாலும், தம்மீதான மக்களின் சீற்றம் இன்னும் தணியவில்லை என்பது மகிந்தவுக்குத் தெரிகின்றது. பல்வேறு கருத்துக் கணிப்புக்களும் இதனை உணர்த்துகின்றன. இப்போதைய நிலையில், எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாமல் ராஜபக்ஷவை *2029* இல் வரப்போகும் தேர்தலுக்குத் தயார்படுத்துவதுதான் மகிந்தவின் உபாயம்.



இருந்தபோதிலும் பசில் ராஜபக்ஷ எவ்வாறான உபாயத்துடன் நாடு திரும்பியிருக்கின்றார் என்பது தெளிவாகவில்லை. மொட்டு அணி எப்படியும் தேர்தலை சந்திக்க வேண்டும் என்பது அக்கட்சியின் ஸ்தாபகரான பசிலின் விருப்பமாக இருக்கின்றது. அதேபோல நாமல் ராஜபக்ஷவும் தோல்வியடைந்தாலும் பரவாயில்லை தேர்தலில் இறங்கவேண்டும் என வலியுறுத்திவருவதாகத் தெரிகின்றது. குடும்பத்துக்குள்ளேயே இரண்டு கருத்துக்கள் இருப்பதால், முடிவெக்க முடியாத நிலை காணப்படுகின்றது.



மகிந்த ராஜபக்ஷ இவ்விடயத்தில் தெளிவாக இருப்பதாகத் தெரிகின்றது. ரணிலுடன் அவருக்கு ஒரு புரிந்துணர்வு இருக்கின்றது. சஜித் அல்லது அநுர அதிகாரத்துக்கு வருவது ராஜபக்ஷக்களுக்கு ஆபத்தானது என்பது அவருக்குத் தெரியும். கடந்த காலம் தொடர்பில் விசாரணைகளை அவர்கள் ஆரம்பித்தால், தமது குடும்பம் ஆபத்தில் சிக்கும் என்ற அச்சம் அவருக்குள்ளது. ஆனால், ரணில் தம்மைப் பாதுகாப்பார் என மகிந்த நம்புகிறார். அதனால்தான் ரணில் விவகாரத்தில் ஒரு மென்போக்கை அவர் முன்னெடுக்கின்றார். எதிர்காலத்தில் அமையக் கூடிய அரசாங்கம் ஒன்றிலும், மொட்டுவின் ஆதரவு ரணிலுக்குத் தேவைப்படும். இந்தப் பரஸ்பர தேவையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் மகிந்தவின் திட்டம்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இலங்கை அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை

பெருந்தோட்ட தொழிலாளர்சம்பளஉயர்வு தொடர்பில் இப்போது அதிகமாக பேசப்பட்டு வருகின்றது. சமகால விலைவாசி அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு என்பவற்றுக்கு மத்தியில் தொழிலாளர்கள் அதிகரித்த பொருளாதார நெருக்கீட்டினை எதிர்கொள்ளும் நிலையில் குறைந்தபட்சம் இரண்டாயிரம் ரூபாவையாவது வழங்குவதற்கு கம்பெனிகள் முன்வருதல் வேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை கம்பெனிகள் 150 வருட வேதன முறையை மாற்றியமைத்து வருமான பங்கீட்டு முறைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.



பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இந் நாட்டிற்கு வருகை தந்து 200 வருடங்களாகி விட்டது. இக்காலப்பகுதியில் இம்மக்கள் சிற்சில அடைவுகளை கொண்டுள்ளபோதும் இன்னும் பல விடயங்களில் பின்தங்கிய நிலைமையினையே வெளிப்படுத்தி வருவது யாவரும் அறிந்ததாகும். இவற்றுள் பொருளாதாரத்துறை என்பது முக்கியமானதாகும். ஒரு சமூகம் மேலெழும்புவதற்கும் பல்வேறு சாதக விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கும் பொருளாதார அபிவிருத்தி மிகவும் இன்றியமையாததாகும். எனினும் மலையக சமூகத்தின் பொருளாதார நிலைமைகள் ஆரம்பகாலம் தொட்டே பின்நிலையில் இருந்து வருவது வருந்தத்தக்கதாகும். இந்நிலைமையானது இம்மக்கள் பல்துறை பின்னடைவை சந்திப்பதற்கு உந்துசக்தியாகியுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படுகின்றார்கள். இலங்கைக்கு தேசிய வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். தேயிலைத் தொழிற்றுறை, ஆடைத் தொழிற்றுறை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்று பல துறைகளிலும் ஈடுபடும் பெண்கள் தம்மை வருத்திக் கொண்டு நாடுயர பாடுபடுகின்றார்கள். எனினும் இம்மக்களின் நலன்கள் எவ்வாறு பேணப்படுகின்றன?

தேசிய நீரோட்டத்தில் இவர்களுக்கான வாய்ப்புகள் எவ்வாறுள்ளன? இம்மக்களின் தொழில் உரிமைகள் உரியவாறு உறுதிப்படுத்தப்படுகின்றனவா? அரசதுறை தொழில் வாய்ப்புக்களில் எம்மவர்கள் உரியவாறு உள்ளீர்க்கப்படுகின்றனரா? என்றெல்லாம் வினவுகையில் விடை திருப்தியானதாக இல்லை. இந்நிலையில் பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே வழிநடத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

**சிறுதோட்ட அபிவிருத்தி**

தேயிலைத் தொழிற்றுறையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் சிறுதோட்ட அபிவிருத்தியில் காட்டும் அக்கறையை பெருந்தோட்ட அபிவிருத்தியில் காண்பிக்கத் தவறி விடுகின்றது. இலங்கையில் சுமார் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான சிறுதோட்ட உரிமையாளர்கள் காணப்படும் நிலையில் சிறுதோட்டங்களின் அபிவிருத்தி கருதி அரசாங்கம் கடன் உதவிகள், சலுகை விலையில் உரப்பகிர்வு உட்பட பல்வேறு மானியங்களையும் வழங்கி வருகின்றது. இதனால் சிறுதோட்டங்களின் உற்பத்தி

துரைசாமி நடராஜா

அதிகரித்துள்ளதோடு உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரமும் அதிகரித்துள்ளது. எனினும் பெருந்தோட்டங்களின் மீதும், தொழிலாளர்களின் மீதும் அரசாங்கம் பாராமுகம் காட்டி வருவதாக கண்டனங்கள் மேலெழுந்து வருகின்றன.



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள நிலைமைகள் ஆரம்ப காலத்திலிருந்தே திருப்தியானதாக காணப்படவில்லை. இம்மக்களின் வருமானத்துக்கும், செலவுக்கும் இடையே பாரிய விரிசல் நிலை காணப்படுவதையே அவதானிக்க முடிந்தது. 1944 க்கு முன்னர் ஆண்தொழிலாளி ஒருவருக்கு நாட்சம்பளமாக 41 சதமும், பெண் தொழிலாளி ஒருவருக்கு 37 சதமும்,சிறுவர்களுக்கு 25 சதமும் வழங்கப்பட்டது.

1967 இல் ஆண் தொழிலாளர்களுக்கு 3 ரூபா ஒரு சதமும்,பெண் தொழிலாளர்களுக்கு 2 ரூபா 45 சதமும்,சிறுவர்களுக்கு 2 ரூபா 13 சதமும் வழங்கப்பட்டன. 1987 இல் ஆண், பெண் இருபாலருக்கும் சமசம்பளமாக ரூபா 33.92 உம், 1989 இல் 37 ரூபாவும் வழங்கப்பட்டது. இவற்றோடு தொழிலாளர்களின் வருமானம் பற்றிய ஆய்வில் 1979 க்கு முன்னர் கிடைத்த



உணவு மானியங்கள் முக்கியமானவை. 1979 இல் வறுமை நிவாரண முறையாக ‘உணவு முத்திரை ‘ அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1965 ம் ஆண்டு வரை அரசாங்கம் தொழிலாளர்களுக்கு அரிசி மானியத்தை வழங்கியது. அரசாங்கம் அரிசியின் உண்மை விலையில் ஒரு பகுதியினை செலுத்தியது. இச்சகாய விலை காரணமாக 1960 இல் தொழிலாளியொருவருக்கு ரூபா 61.36 உம், 1965 இல் ரூபா 65.52 உம் இலாபமாகக் கிடைத்தது. 1967 முதல் அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. இதேவேளை 1970 முதல் 1978 வரை அரிசி இலவசமாகவும், மானிய விலையிலும் வழங்கப்பட்ட நிலையில் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட தொழிலாளர் குடும்பமொன்று மாதாந்தம் 1974 இல் ரூபா105 ஐயும், 1979 இல் ரூபா 53.33 இனையும் இலாபமாக பெற்றுக் கொண்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கருதி கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்னதாகதொழிலாளர்களின் சம்பளம், சம்பள நிர்ணய சபையின் மூலமாகவே தீர்மானிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளத்தை தீர்மானிப்பதே சம்பள நிர்ணய சபையின் வரம்புக்குட்பட்ட அதிகாரம் ஆகுமென்று மூத்ததொழிற்சங்கவாதி எஸ்.இராமநாதன் சுட்டிக்காட்டுகின்றார்.

மேலும் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொள்வதில் எதிர்கொள்ளப்பட்ட அனுபவ ரீதியான பிரச்சினைகள் காரணமாகவே இதற்கு மாற்றீடாக கூட்டு ஒப்பந்த முறை சிறந்ததாகக் கருதப்பட்டதாகவும் அவர் கூறுகின்றார். எவ்வாறெனினும் பின்னர் கூட்டு ஒப்பந்த முறையும் பல்வேறு விமர்சனங்களுக்கும் உள்ளானமை தெரிந்ததேயாகும். கூட்டு ஒப்பந்தத்தை அடிமைச் சாசனம், மரணப்பொறி என்றெல்லாம் முக்கியஸ்தர்கள் விமர்சித்திருந்தனர்.




அத்தோடு கூட்டு ஒப்பந்தத்தின் சில சரத்துக்கள் தொழிலாளர்களுக்கு பாதகமாக அமைந்துள்ளதால் இச்சரத்துக்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததது. மேலும் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தொழிற்சங்கங்களும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் தொழிற்சங்கவாதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்நிலையில் தோட்ட நிர்வாகங்கள் மற்றும் கம்பெனிகள் கூட்டு ஒப்பந்தத்தை மீறிய பல நிகழ்வுகள் அடிக்கடி பதிவாகும் நிலையில் தொழிலாளர்கள் இதனால் கொதித்தெழுந்த சம்பவங்களும் அநேகமுள்ளன.

இதனிடையே கூட்டு ஒப்பந்தம் நன்மை

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



# சாந்தனின் சாவுக்கு யார் பொறுப்பு?

சாந்தன் மறைந்தார்! இந்திய ஆட்சியாளர்களின் கருணையின்மைக்கும் தமிழக ஆட்சியாளர்களின் உறுதியின்மைக்கும் இன்னுமோர் ஈழத் தமிழ் உயிர் பலியாகியுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 'தடா' சிறப்பு நீதிமன்றத்தில் கொலைத் தண்டனை விதிக்கப்பெற்ற 26 தமிழர்களில் சரிபாதிப் பேர் ஈழத் தமிழர்கள். மேல் முறையீட்டில் இந்திய உச்ச நீதிமன்றம் அவர்களில் 19 பேரை விடுதலை செய்தது. எஞ்சிய எழுவரில் ஒருவர் சாந்தன். அவர் உட்பட நான்கு பேருக்குக் கொலைத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. நால்வரில் நளினிக்கு மட்டும் மாநில அரசின் பரிந்துரைப்படி தூக்குத் தண்டனை வாழ்நாள் சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.



முருகன்



பேரறிவாளன்



சாந்தன்

எஞ்சிய மூவரான பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்குத் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற இந்திய அரசு ஆணை பிறப்பித்த போது அவர்களின் உயிர் காக்கத் தமிழ்நாட்டில் பாரிய அளவில் இயக்கம் நடத்தினோம். அதன் உச்சமாகக் காஞ்சி மக்கள் மன்றத்தைச் சேர்ந்த செங்கொடி தீக்குளித்தார். மூவர் உயிர்காக்கத் தமிழ்நாடு சட்டப்பேரவை தீர்மானம் இயற்றியது. அவர்களைத் தூக்கிலிட சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.



இறுதியில் இந்திய உச்ச நீதிமன்றம் அவர்களைத் தூக்குத் தண்டனையிலிருந்து விடுவித்து வாழ்நாள் சிறைப்பட்டோராக்கியது. ஏற்கெனவே இந்த வழக்கில் வாழ்நாள் சிறைத் தண்டனை கழித்து வரும் நால்வரையும் சேர்த்து இந்த எழுவரையும் உரிய நடைமுறைகளைக் கடைப்பிடித்து முன்விடுதலை செய்யலாம் என்றும் பரிந்துரைத்தது. இந்த அடிப்படையில் அன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களை விடுதலை செய்வதற்காக இந்திய அரசுக்குக் கடிதம் எழுதினார். ஆனால் இந்திய அரசு அவர்களின் விடுதலையை மறித்து விட்டதோடு வழக்கை உச்சநீதிமன்றத்திற்கும் கொண்டு சென்றது.

குற்ற நடைமுறைச் சட்டத்தின் படி இந்த எழுவரையும் முன்விடுதலை செய்ய இந்திய அரசின் ஒப்புதல் தேவை என்று உச்ச நீதிமன்றம் சொல்லி விட்டது. ஆனால் அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 161இன் படி மாநில ஆளுநருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இவர்களை விடுதலை செய்யத் தடையில்லை என்றும் தெளிவாக்கியது. இந்த அடிப்படையில்



தியாகு
பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான மாநில அமைச்சரவை கூடி எழுவர் விடுதலைக்குத் தீர்மானம் இயற்றி ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது. ஆளுநர் எவ்வித முடிவும் எடுக்காமல் ஆண்டுக் கணக்கில் முடக்கிப் போட்டார்.



பன்வாரிலால் புரோகித் போய் ஆர்.என். இரவி வந்த பிறகும் எழுவர் விடுதலைக் கோப்பு கிண்டி ராஜ் பவனில் முடங்கியே கிடந்தது.

இதற்கிடையில் சிறையில் இருந்த படி பேரறிவாளன் தொடர்ச்சியான சட்டப் போராட்டம் நடத்தினார். தகவல் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி இந்திய அரசின் அநீதியான நடை முறைகளை அம்பலமாக்கினார். வெளியே அவர் தாயார் அற்புதம்மாள் அரும் பாடாற்றினார். சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி முருகனும் இந்திய உச்ச நீதிமன்றத்தில் பேரறிவாளனும் தொடர்ந்த வழக்குகளில் தமிழக ஆளுநரின் அவரை ஆட்டிவைக்கும் ஒன்றிய அரசின் அப்பட்டமான பொய்மை வெளிப்பட்டது. ஆளுநர் சொன்ன சட்டக் காரணங்கள் உச்ச நீதிமன்றத்தில் எடுபடவில்லை.

வேறுவழியின்றி உச்சநீதிமன்றம் தன்சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்திப் பேரறிவாளனை விடுதலை செய்ய ஆணையிட்டது. அதே வழக்கு, அதே சட்டச் சிக்கல், அதே நியாயங்கள் என்ற அடிப்படையில் சாந்தன், முருகன், இராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவி, நளினி ஆகியோரையும் அரசு விடுதலை செய்திருக்க வேண்டும். ஆனால் ஆளுநர் இப்போதும் அசைந்து கொடுக்கவில்லை. எனவே இந்த ஆறு பேரும் உச்ச நீதிமன்றத்தை அணுகினார்கள். உச்ச நீதிமன்றம் மீண்டும் தன் சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை விடுதலை செய்தது. அந்த நாள் 2022 நவம்பர் 11. அதே நாளில் சாந்தன் முதலான அறுவரும் விடுமைக் காற்றை சுவாசித்திருக்க வேண்டும். அப்படி நடந்ததா? நடக்கவில்லை.

நளினியும் இரவியும் விடுதலை செய்யப்பட்டு இல்லம் போய்ச் சேர்ந்தார்கள். சாந்தனுக்கும் இராபர்ட் பயசுக்கும் முருகனுக்கும் ஜெயக்குமாருக்கும் இந்த இன்பம் வாய்க்கவில்லை. அவர்கள் ஈழத் தமிழர்களாயிற்றே! இது இந்தியத் தமிழ்நாடு ஆயிற்றே!



வேலூர் சிறை யிலிருந்து சாந்தனும் முருகனும், புழல் சிறையிலிருந்து இராபர்ட் பயசும் ஜெயக்குமாரும் திருச்சிராப்பள்ளிக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள சிறப்பு முகாமில் 'வைக்கப் பட்டனர்'. உச்ச நீதிமன்ற ஆணைப்படி விடுதலை பெற வேண்டியவர்கள் சிறைமாற்றலே பெற்றனர். அவர்களின் புதிய இடத்துக்குப் பெயர் சிறை இல்லை, சிறப்பு முகாம்!

அது என்ன சிறப்பு முகாம்! இந்தியா பிரித்தானியக் காலனியாக இருந்த காலத்தில் 1946ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அயலார் சட்டம் (Foreigners Act, 1946) உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவிற்குள் வந்து விட்ட அயலாரைத் திருப்பி அனுப்பும் வரை அல்லது அவர்கள் தங்கியிருப்பதை முறைப்படுத்தும் வரை தற்காலிகமாக ஒரு முகாமில் தங்க வைப்பதற்கு வகை செய்கிறது. இதுதான் சிறப்பு முகாம்.

தமிழ்நாட்டில் ஈழத் தமிழ் ஏதிலியருக்கு

தொடர்ச்சி 11ஆம் பக்கம்




# அணுவாயுதப்போர்
# தப்பிக்க வழி என்ன?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

ஆய்வாளர்களின் தரம் எதில் வெளிப்படும் என்றால் அவர்களின் கணிப்புகளும், தரவுகளும் சரியாகும் பட்சத்தில். ஆனால் உக்ரைன் - ரஸ்ய போர் தொடர்பில் மேற்குலக ஊடகவியலாளர்களினால் வெளியிடப்படும் படைத்துறை, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் தொடர்பான ஆய்வுகள் அல்லது கணிப்புகள் அனைத்துமே தவறாகிப்போனதைத் தான் கடந்த இரண்டு வருடங்களில் காண முடிந்துள்ளது.

ஒவ்வொரு தடவையும் மேற்குலக நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கும்போது அவை களத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற கருத்துக்களை ஊடகங்கள் அவசர அவசரமாக வெளியிட்டுவிடுகின்றன. ஆனால் களமுனையில் எந்த மாற்றமும் உக்ரைனுக்கு சாதகமாக கடந்த இரண்டு வருடங்களில் நிகழவில்லை.



கடந்த ஒரு வாரத்தில் உக்ரைனில் அழிவுக்குள்ளான அமெரிக்காவின் 3 ஆப்ரம்-எம்-1 டாங்கிகள், அதற்கு முன்னர் அழிந்துபோன பற்றியாட் ஏவுகணைகள், ஜேர்மனின் லெபாட் டாங்கிகள், பிரித்தானியாவின் சலஞ்சர் டாங்கிகள் என அதன் பட்டியல் நீளம். ரஸ்யாவும் அழிவுகளைச் சந்தித்தபோதும் அது உக்ரைனின் வெற்றியாக பார்க்கப்படவில்லை. ஏனெனில் உக்ரைனின் இழப்புக்கள் மிக மிக அதிகம்.



உலகின் மிகப்பெரும் மற்றும் பலம் வாய்ந்த படைத்துறைக் கூட்டணியான நேட்டோ கூட்டணி படைத்துறை, புலனாய்வு, நிதி மற்றும் தொழில்நுட்பம் ஆகிய கணிசமான வளங்களை பயன்படுத்தியபோதும் உக்ரைன் பல இலட்சம் படையினரை இழந்துள்ளதே தவிர களமுனையில் மாற்றம் ஏற்படவில்லை.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் ஆரம்பித்தபோது உக்ரைனின் தலைநகர் கிவ் 72 மணிநேரத்திற்குள் வீழந்துவிடும் எனவும், அங்கு 25,000 தொடக்கம் 50,000 மக்கள் கொல்லப்படலாம் எனவும் அமெரிக்காவின் இராணுவ ஜெனரல்கள் கணிப்பிட்டிருந்தனர். ஆனால் ரஸ்யாவின் திட்டம் அதுவல்ல என்பதை அவர்கள் கணிக்கத் தவறி விட்டனர்.

கிவ்விற்கு அண்மையாக வந்த ரஸ்யப் படையினர் பின்வாங்கியபோது அது உக்ரைனின் வெற்றியாக மேற்குலகம் ஆர்ப்பரித்துக்கொண்டது. எனவே தான் தன்னிலை மறந்து உக்ரைனுக்கான படைத்துறை மற்றும் நிதி உதவிகள் வாரி வழங்கப் பட்டன.



ரஸ்யா மீது உலகில் எந்த நாடுகள் மீதும் போடப்படாத பொருளாதாரத்தடைகள் கொண்டுவரப்பட்டன. முன்னைய சோவியத்து காலத்தைவிட மிகமோசமான பொருளாதார சீரழிவை ரஸ்யா சந்திக்கும் என மேற்குலகம் கணிப்பிட்டது. ரஸ்யாவின் பொருளாதாரம் உலகில் அந்நியப்படுத்தப்பட்டு அவர்கள் மீண்டும் எழமுடியாத நிலை ஏற்படும் என எதிர்வுகள் கூறப்பட்டன. ஆனால் நடந்தது என்னவோ எதிர்மறையானது தான். தெற்கு மண்டல நாடுகளுடன் இணைந்து ரஸ்யாவின் பொருளாதாரம் வீழ்ச்சிக்கு பதிலாக வளர்ச்சி கண்டது. ஆனால் மேற்குலக நாடுகள் பலவற்றின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

அமெரிக்க டொலரை மையமாகக் கொண்ட உலக வர்த்தகமும் ஆட்டம் கண்டது. 100 நாட்களுக்கு ஒரு றில்லியன் டொலர்கள் என அமெரிக்காவின் கடன்சுமை அதிகரிப்பதாக அமெரிக்க வங்கிகள் கூறுகின்றன. பொருளாதார வீழ்ச்சி மற்றும் பணவீக்கத்தால் ரஸ்யாவில் உள்நாட்டு கலவரங்கள் ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டது. ஆனால் அங்கு எதுவும் ஏற்படவில்லை. மாறாக ஐரோப்பாவில் விவசாயிகளின் போராட்டம் உச்சம் பெற்றுள்ளது.

கூலிப்படையான வக்னர் குழுவின் தலைவர் பிறிகோசன் 2023 ஆம் ஆண்டு மேற்கொண்ட படைத்துறை புரட்சியும் பெரிதாக பேசப்பட்டபோதும் அதுவும் அடங்கிப்போய் விட்டது. 1991 ஆம் ஆண்டு ஏற்பட்ட படைத்துறை புரட்சி அடக்கப்பட்டாலும், பின்னர் 4 மாதங்களில் சோவியத்து ஒன்றியம் வீழ்ந்துவிட்டது. அவ்வாறே பிறிகொசனின் புரட்சியும் பார்க்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு கார்கோவ் மற்றும் கேர்சன் பகுதிகளில் இருந்து ரஸ்யபடையினர் வெளியேறியதை உக்ரைனின் வெற்றியாக பார்க்கப்பட்டது. எனவே உக்ரைனுக்கு அதிக ஆயுதங்களை வழங்கினால் கிரைமியாவையும் கைப்பற்றிவிடலாம் என நேட்டோ நம்பியது. ஆனால் தமக்கு பாதகமான களமுனையை ரஸ்யா தவிர்த்து தனது பலத்தை தக்கவைக்க முற்படுகின்றது என்பதை அவர்களின் மனம் ஏற்க மறுத்தது.

குறைந்த செலவில் எடுக்கப்படும் சண்டைப் படம் போலவே இந்த களமுனையை மேற்குலக ஆய்வாளர்கள் பார்த்தனர். ரஸ்யா வீழ்ந்துவிட்டது. தொடர்ந்து வீழ்ச்சிகாணும் என கூறப்பட்டது. ஆனால் எதுவும் இன்றுவரை நடக்கவில்லை.

தமக்கு 300 டாங்கிகளும், 700 கவசவாகனங்களும், 500 ஆட்டிலறி பீரங்கிகளும் தரப்பட்டால் எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்கு முன்னர் கிரைமியாவையும் சேர்த்து கைப்பற்றிவிடுவோம் என கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உக்ரைனின் முன்னாள் பிரதம தளபதி வலரி சலுஸ்னி தெரிவித்திருந்தார்.

இந்தஉறுதிமொழிகளைஅப்படியேநம்பிய மேற்குலகம் டாங்கிகளையும், பிரங்கிகளையும் கவசவாகனங்களையும் அள்ளி வழங்கின. 2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அசோவ் கடற்பகுதியை ஊடறுத்து கிரைமியாவை தனிமைப்படுத்துவது தான் திட்டம்.



ரஸ்யாவிடம் உள்ள எறிகணைகள் ஒரு மாதத்திற்கு தான் போதும், ஏவுகணைகள் 10 நாட்களில் தீர்ந்துவிடும், மென்கடத்திகளை துணிதுவைக்கும் இயந்திரங்களில் இருந்து அகற்றியே ரஸ்யா தனது ஏவுகணைகளுக்கு பயன்படுத்துகின்றது என்ற விமர்சனங்களை

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# மத்திய கிழக்கின் அமைதிக்கு அவசியமான ஒரு ஒப்பந்தத்தை முறிக்கும் தறுவாயில் இஸ்ரேல்

**இறுதிப் பகுதி**

தமிழில்: ஜெயந்திரன்

### வலயம் D: இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, காம்ப் டேவிட் ஒப்பந்தத்தை மீறுவதற்கான காரணம்

காஸாப் பிரதேசத்தின் மத்திய மற்றும் வடக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர வைக்கப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் றாவா *(Rafah)* நகரத்தின் பாலஸ்தீனப் பக்கத்தில் தற்போது தங்கியிருக்கிறார்கள்.

இந்தப் பிரதேசத்தில், 4000 இராணுவ வீரர்களை உள்ளடக்கிய, காலாட்படையை நிலைகொள்ள வைப்பதற்கு இஸ்ரேலுக்கு அனுமதி இருக்கிறது. இவர்கள் எகிப்துக்கும் காஸாவுக்கும் இடையேயான 14 கிலோ மீற்றர் நீளமான பகுதியில் மட்டுமன்றி, மத்தியதரைக் கடல் தொடங்கி, எய்லாட் வரை, அப்பிரதேசம் முழுவதுமே பரந்து நிலைகொண்டிருக்கிறார்கள். இக்குறிப்பிட்ட பிரதேசத்தை இஸ்ரேல் எந்தவிதத்திலும் அது பயிற்சியாக இருந்தால் கூட, விரிவுபடுத்த முடியாது. அவ்வாறு இஸ்ரேல் அப்பிரதேசத்தை விரிவுபடுத்துமாயின், அது அமைதி ஒப்பந்தத்தின் சரத்துகளை மீறுகின்ற செயலாகவே அமையும்.



இந்தக் காரணத்தினால், றாவா *(Rafah)* நகரத்தை முற்றுகையிடும் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளின் எண்ணம், நேரடியாக, காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட விடயங்களை மீறுவதாக அமையும். எகிப்துக்கும், காஸாவுக்கும் இடையேயான எல்லையில் அமைந்து, இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற (எகிப்துப் பக்கம், பாலஸ்தீனப் பக்கம்) இந்த நகரம், D வலயத்தின் ஒரு பகுதியாகும். எகிப்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாமல், இந்தக் குறிப்பிட்ட பிரதேசத்தில், தமது பாதுகாப்புப் படைகளின் பலத்தை இஸ்ரேல் அதிகரிக்குமானால், அது ஒப்பந்தத்தை முற்றுமுழுதாக மீறுவதாகவே இருக்கும்.



இடம்பெயர வைக்கப்பட்ட மக்களை வெளியேற்றும் இஸ்ரேலின் திட்டங்களும் கேள்விக்குரியவையே. காஸாவை விட்டு, பாலஸ்தீனர்கள் வெளியேற எகிப்து ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

2023ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் போர் ஆரம்பித்ததிலிருந்து, அகதிகளை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று எகிப்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்திருக்கிறது.

தற்போது, கடுமையாக நோயுற்றிருப்பவர்கள் அல்லது படுகாயங்களுக்கு உள்ளானவர்களும், பெற்றோரை இழந்த பிள்ளைகள் மற்றும் வெளிநாட்டுக் குடிமக்கள் ஆகியோர் மாத்திரமே எகிப்துக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள். ஒக்ரோபர் மாதத்திலிருந்து, காஸாவுடனான எல்லைப் புறத்தில் உள்ள சுவரை எகிப்து பலப்படுத்தியிருப்பது மட்டுமன்றி, றாவாவுக்கு அருகே, ஷீக் சுவெய்ட் *(Sheikh Zuweid)* என்னும் இடத்தில், ஒரு கள மருத்துவமனையும் அது தாபித்திருக்கிறது.

### றாவாவில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கட்டுமானப் பணிகள்

பல நாட்களுக்கு முன்னர், றாவா நகரத்தின் எகிப்துப் புறத்தில், கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன, கட்டடங்கள் தரை மட்டமாக்கப்படுவதுடன் கொங்கிறீட் அங்கு இறக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுமானப் பணி தொடர்பான செய்திகள் இரகசியமாக வைத்திருக்கப்படுவதனால், இஸ்ரேல் அப்பிரதேசத்தில் ஒரு தரைத் தாக்குதலை முன்னெடுக்கும் பட்சத்தில், அவ்வாறான ஒரு சூழலில், பாலஸ்தீன மக்களைத் தங்க வைப்பதற்கான ஒரு தற்காலிக இடைப்பகுதியை எகிப்து உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்ற ஊகத்தை ஊடக வியலாளர்கள் மேற்கொள்ளுகிறார்கள்.



சீனாய் குடிமக்களிடமிருந்து வருகின்ற செய்திகளின் படி, அப்னா சைனாய் *(Abnaa Sinai)* என்ற கம்பனிக்குச் சொந்தமான பொறியியல் உபகரணங்களின் உதவியுடனேயே இந்தக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எகிப்திய புலனாய்வுப் பிரிவுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கின்ற எகிப்திய வர்த்தகரான இப்ராஹீம் அல் - அர்ஜானி *(Ibrahim al-Arjani)* என்பவருக்கு இந்தக் கம்பனி சொந்தமானதாகும். ‘சீனாய்க் குடிகளின் ஒன்றியம்’ என அழைக்கப்படும் இராணுவப் படைகளுடன் தொடர்புடைய படைவீரர்களின் கண்காணிப்பில், அல் - அர்ஜானியின் தலைமையில், கனரக இயந்திரங்கள், றாவாப் பிரதேசத்தில் பெருமளவான பிரதேசத்தை துப்புரவு செய்து கொண்டிருக்கின்றன.



தரைமட்டமாக்கப்பட்ட வீடுகள் இருந்த இடங்களில் உள்ள கட்டடச் சிதைவுகள் துப்புரவு செய்யப்படுகின்றன. அப்னா சைனாய்க் கம்பனிக்குச் சொந்தமான கொங்கிறீட் தொழிற்சாலையிலிருந்து பொருட்கள் குறிப்பிட்ட பிரதேசத்தில் இறக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. வட சீனாய் மாகாணத்திலுள்ள இராணுவப் படைகளுக்குத் தேவையான கொங்கிறீட்டை குறிப்பிட்ட தொழிற்சாலை உற்பத்தி செய்துவருகிறது. ஏகிப்து – காஸா எல்லைப் புறத்தில் ஒரு புதிய சுவரைக் கட்டுவதற்கும் மேற்படி கொங்கிறீட் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி, 7 மீற்றர் உயரமான சுவர்களைக் கொண்ட மூடப்பட்ட பகுதிகளையும் எகிப்து தற்போது கட்டத்தொடங்கியிருக்கிறது.



கடந்த சில நாட்களாக, எகிப்திய இராணுவத் தலைவர்கள், வட சீனாய் மாகாணத்துக்கும், றாவா நகரத்துக்கும் அடிக்கடி பயணம் செய்து கொண்டிருக்கின்றனர். எகிப்திய இராணுவப் படைகளுக்கும், பன்னாட்டு அமைதிப் படைகளுக்கும் சொந்தமான உலங்கு வானூர்திகள், பிலடெல்பி அச்சுக்கு அருகே அடிக்கடி தரையிறங்கிச் செல்வதைத் தற்போது அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அதுமட்டுமன்றி, எகிப்திய மற்றும் வெளிநாட்டு அதிகாரிகள் குறிப்பிட்ட பிரதேசத்துக்கு அடிக்கடி சென்று, காஸாப் பிரதேசத்துக்கு மனிதாய உதவிகள் வழங்கப்படுவதையும் கண்காணித்து வருகின்றனர்.

அண்மையில் ஐசிஸ் தீவிரவாதிகளுடன் நடைபெற்ற போரின் போது, வட சீனாய்ப் பிரதேசத்தில் வசிப்பவர்களில் அநேகமானோர், குறிப்பாக றாவா மற்றும் ஷேக் சுவெய்ட் ஆகிய நகரங்களில் வசிப்பவர்கள், வேறு பிரதேசங்களுக்கு நகர்த்தப்பட்டனர். தற்போது அவர்கள் தங்கள் இல்லிடங்களுக்குத் திரும்பும் நம்பிக்கையோடு இருப்பதால், தங்கள் வீடுகளின் நிலை தொடர்பாகக் கவலை அடைந்திருக்கின்றனர்.

எகிப்திய அதிகாரிகளின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை எடுத்துரைத்த வட சீனாய்ப் பிரதேசத்தின் ஆளுநராகப் பணியாற்றும் மொஹமட் அப்டெல் வாடில் ஷ_ஷா *(Mohamed Abdel-Fadil Shousha)* ஓர் இடைப்பகுதி கட்டப்படுவதை முற்றுமுழுதாக மறுதலித்தார். வீடுகளை இழந்தவருக்கு உரிய இழப்பீட்டை வழங்கும் நோக்குடன், பயங்கரவாதிகளுடன் நடைபெற்ற போர்க் காலத்தில் அழிக்கப்பட்ட வீடுகள் தொடர்பான தரவுகள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

பாலஸ்தீன அகதிகளுக்கான முகாம்களை அமைக்கும் எண்ணம் எதுவும் எகிப்திய அதிகாரிகளுக்கு இல்லை என்று தெரிவித்த மேற்குறிப்பிட்ட அதிகாரி, றாவாவில் நடக்கும் கட்டுமானப் பணிகளுக்கும் காஸாவில் நடக்கம் நிகழ்வுகளுக்கும் எந்த விதமான தொடர்புகளும் இல்லை எனத் தெரிவித்தார். தங்களது கொள்கையிலிருந்து தாம் எந்தவிதத்திலும் விலக மாட்டோம் என்றும் பாலஸ்தீன அகதிகளை எக்காரணம் கொண்டும் தாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

இளையோரே சிகரம் நீங்கள்

# கலாச்சார முரண்பாடுகளை கலாச்சார அரண்களாக்குவோம்

கவிதா ஆல்பர்ட்

கலாச்சாரம் என்பது பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. தமிழர் வாழ்வியலோடு பண்பாடு விரவிக் கிடந்ததே என்றே கூறலாம். அறப்பண்புகள் பண்பாட்டுக்கு ஆதாரங்களாக இருந்தன. இன்றளவும் தமிழ் பண்பாடு, பல்வேறு இடங்களில் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருவது மனதுக்குச் சற்று ஆறுதலான விடயம்.

தமிழர்கள் நாடுகளைக் கடந்து சென்றாலும், நாகரீகமும் பண்பாடும் அவர்களோடு இணைந்தே சென்றது எனலாம். உலகமயமாதலில் பல்வேறு நன்மைகள் இருப்பினும், கலாச்சார சிதைவுகளும், பண்பாட்டுச்சிதைவுகளும், நம் இளையோரிடமும் தொற்று வியாதிகளைப் போல தொற்றிக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன.



நல்லவர்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்கள் நல்லவர்களாகத் தான் வாழ்கின்றனர். ஆயினும் இன்றைய சமூக அமைப்பு நல்லவர்களாக வாழ்பவர்களையும் சில நேரங்களில் கலாச்சார சிதைவில் வீழ்த்தி விடுகிறது. அதற்குக் காரணம் தொழில்நுட்ப வளர்ச்சியும், வாழ்வியல் சூழ்நிலையும், திரைப்படங்களும் அரசியலும் இளையோரை நன்மை, தீமை ஆய்ந்தறிந்து சிந்திக்க விடாமல், சிதைவின் விளிம்புக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது.

குடும்பங்களின் உறவு நிலையில் நெருக்கம் குறைந்து விடுகிறது. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது. இதனால் பெற்றோர் பாசம் என்ற பெயரிலும், தமது செல்வாக்கையும் செல்வத்தையும் வெளிப்படுத்தும் வகையிலும், ஆடம்பரமான வாழ்வியலைப் பிள்ளைகளுக்கு கொடுத்து வருகின்றனர். அதனால் பிள்ளைகள் நன்மை, தீமை அறிந்து தேர்ந்து தெளியும் வாய்ப்பு இல்லாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.



தாங்கள் தொழில்நுட்ப அறிவை மிகுதியாகப் பெற்றிருப்பதால், இளையோர், தங்களுக்கு எல்லாம் தெரியும். யாரும் தங்களுக்கு வழி காட்ட வேண்டியதில்லை. தெரியாததை நாங்கள் இணையத் தளத்தின் வழியாக கற்றுக்கொள்வோம் என்பது போன்ற மனநிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அதனால் பெரும்பாலும் பெற்றோரின் ஆலோசனைகளையும், ஆசிரியர்களின் ஆலோசனைகளையும் கேட்கும் மனநிலையில் அவர்கள் இல்லை. அதிலும் குறிப்பாக கல்வியறிவு குறைந்த நிலையில் இருக்கும் பெற்றோர், தங்கள் மகன் அல்லது மகள் எட்டுக் கண்டங்களைத் தாண்டும் அறிவுக்கும், விண்ணைத் தாண்டிச் செல்லும் அளவுக்கும் வித்தைகளைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று புளகாங்கி தம் அடைகிறார்களே தவிர, அவர்கள் என்ன கற்றுக் கொள்கிறார்கள், அவர்களது மன நிலை என்ன, அவர்களது தேடல் என்ன, உண்மையாகவே அவர்கள் கல்வியைத் தான் கற்றுக் கொண்டிருக்கிறார்களா என்று கண்டுபிடிக்கும் தொழில்நுட்பஅறிவுஅவர்களுக்குஇருப்பதில்லை. அதனால் பிள்ளைகள் போக்கிலேயே அவர்களை விட்டுவிடுகின்றனர்.



முன்பெல்லாம் பள்ளியின் ஆரம்ப பாடசாலையிலேயே நம் ஆசிரியர்கள் அறச்சொல்லாடல்களையும், மனித மாண்புகளையும் வாழ்வியல் உண்மைகளையும், சமூக அமைப்பு சார்ந்த சங்கதிகளையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நமக்குக் கற்றுத் தந்து விடுவார்கள். நாமும் "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பதைப் போன்று, அறநெறிகளோடு வாழ்ந்து வருவோம். பகிர்தல், விருந்தோம்பல், உதவி செய்தல், கருணையோடு நடந்துகொள்ளுதல், விட்டுக்கொடுத்தல், ஒருவருக்கொருவர் நல்ல பண்புகளைக் கற்றுக்கொடுத்தல் என்று பண்பாட்டு விழுமியங்களை வீட்டிலும், பள்ளியிலும் கற்று வளர்ந்தோம்.



கல்விமுறையில்பண்பாட்டுக்கல்விக்கென நேரம் ஒதுக்கப்பட்டது. உடலையும் மனதையும் பண்படுத்தப் பயிற்சி அளிக்கப்பட்டது. இன்று பள்ளிகள் பிள்ளைகளின் மீது, கனமான கல்வி என்னும் சுமையை ஏற்றி, எங்கும், எப்போதும், எதிலும் கல்வி என்பது போன்று, சுகமான கல்வியைச் சுமையாக மாற்றும் அவலம் அகிலம் முழுவதும் அரங்கேறிக்கொண்டிருக்கிறது.

'பணம் இருந்தால் எதையும் செய்யலாம்' என்கிற மனநிலைக்கு இளையோர் ஆட்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அத னால் திருமண உறவின் புனிதம் கெடத் தொடங்கிவிட்டது. ஆணும் ஆணும் திருமணம் செய்வது, பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்வது, யார் வேண்டுமானாலும் யாருடனும் வாழலாம் என்பது போன்ற கலாச்சார சிதைவுகளை இளையோர் அங்கீகரிக்கத் தொடங்கிவிட்டனர்.

இதனால், இன்று குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம், ஏராளம். பெற்றோர் தங்கள் பிள்ளைகளால் பெருமை வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போகும் நிலைக்குப் பல பெற்றோர் தள்ளப்படுகின்றனர். இதனால் பெற்று, வளர்த்து, ஆளாக்கியவர்களை தூக்கி எறிந்துவிட்டு, சமூக சீரழிவுகளுக்குள் புதைந்து போகின்ற நிகழ்வுகள் ஏராளமாக அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.



திருமண உறவின் புனிதத் தன்மை கெடுகிறது என்று சொல்வதை விட திருமண உறவின் முக்கியத்துவத்தையும், மதிப்பீடுகளையும் தெரியாமல் பல இளையோர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதனால் தான், புதிது புதிதாக எதையோ கற்றுக்கொள்வதாக எண்ணிக்கொண்டு, புரியாத புதிருக்குள் மாட்டிக்கொள்கிறார்கள்.

இதனால், ஏராளமான கலாச்சார முரண்பாடுகள் அரங்கேறி வருகின்றன. "தன் மகனைச் சான்றோனாக்குவதே தந்தையின் கடமை" என்று ஒவ்வொரு பெற்றோரும் உணர வேண்டும். பிள்ளைகளைப்பெற்றுவிட்டால்மட்டும்போதாது. அவர்களை உயர்ந்த பண்புடையவர்களாக வளர்த்து, ஆளாக்கி, மனித நேயத்துடன், மாண்புற வாழச் செய்வதை அவர்கள் தங்கள் கடமையாகக் கருத வேண்டும்.

பிள்ளைகளுக்குச் சிறந்த முன்மாதிரியாக வாழ வேண்டும். பிள்ளைகளும் நல்லவற்றை எங்கு காண நேர்ந்தாலும் அதைத் தேடிப் பிடித்துக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்லவர்களோடு நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். திருமண உறவின் புனிதம் உணர்ந்து, அதன் முக்கியத்துவம் உணர்ந்து, சிறந்த பண்பாட்டு மையங்களாகக் குடும்பங்களை மாற்ற வேண்டும்.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த வாழ்க்கையை நாம் வரமாக எண்ணி வாழ முற்பட வேண்டும். ஆகவே கலாச்சார முரண்பாடுகளை நாம் களைந்து, கலாச்சாரத்தை இந்த அழகிய உலகின் அரண்களாக்குவோம்.

• • •

**இலங்கை அர... தொடர்ச்சி ...**

கள் பலவற்றுக்கு வித்திட்டுள்ளதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் தேசிய மற்றும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கமைய செய்து கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்த முறை தொழிலாளர்களுக்கு சாதகமாக அமையாதவிடத்து, அதைவிட சிறந்த முறையிலான கூடிய தன்மை தரக்கூடிய வழிமுறையைப் பின்பற்ற தொழிற்சங்கங்கள் ஆலோசிக்க முடியும் என்றும் பதிவுகள் உள்ளன.

### பங்கீட்டு முறை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயமானது தொடர்ச்சியாக இழுபறியாகவே இருந்து வருகின்றது. தொழிலாளர்கள் தமது சம்பள அதிகரிப்பு கருதி பல்வேறு போராட்டங்களிலும் கடந்த காலங்களில் ஈடுபட்டனர். மெதுவாக பணி புரிதல், கொழும்புக்கு தேயிலையை கொண்டு செல்லவிடாது தடுத்து நிறுத்துதல், வேலைநிறுத்தம் உள்ளிட்ட பல போராட்டங்களும் இதில் உள்ளடங்கும். எனினும் இப்போராட்டங்களின் மூலமாக தொழிலாளர்கள் எதிர்பார்த்த நியாயமான சம்பள உயர்வு கிடைக்காத நிலையில் சொற்ப சம்பள அதிகரிப்புகளே பெற்றுக்கொள்ளப்பட்டமையும் கசப்பான உண்மையாகும்.

தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகள் அதிகளவு இலாபத்தை பெற்றுக் கொள்கின்றபோதும் தொழிலாளர் நலன்களில் அவை கிஞ்சித்தும் அக்கறை செலுத்துவதில்லை. உழைப்புக்கேற்ற ஊதியத்தை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதில்லை என்று தொழிற்சங்க தரப்பினர் கூறி வருவதையும் அவதானிக்க முடிகின்றது. எனினும் கம்பனியினர் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

'பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழுள்ள தோட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்து ஆயிரம் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களே பணியாற்றி வந்தபோதும் இத்தொழிலோடு மறைமுகமாக இணைந்திருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 20 இலட்சமாகும். இத்தனை பேரின் வாழ்வாதாரம் தங்கியிருக்கும் இத்துறையை நாம் மிகுந்த நெருக்கடிக்கு மத்தியிலேயே கொண்டு நடாத்துகின்றோம்.

150 வருட வேதனை முறையை மாற்றியமைக்க வேண்டுமெனவும், வருமான பங்கீட்டு முறையை கொண்டு வருமாறும் தொழிற்சங்கங்களை வலியுறுத்தினோம். ஆனால் அவர்கள் அது குறித்து அக்கறை செலுத்தவில்லை. தொழிலாளர்களை அதே நிலையில் வைத்திருக்கவே தொழிற்சங்கங்கள் ஆசைப்படுகின்றன. எமது திட்டத்தின் கீழ் பல தோட்டங்களில் மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா வேதனம் பெறும் தொழிலாளர்கள் உள்ளனர்' என்று கலாநிதி ரொஷான் ராஜதுரை அண்மையில் தெரிவித்திருந்தார். இதேவேளை தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலை, உற்பத்தி செலவு அதிகரிப்பு என்பன தொடர்பிலும் கம்பனி தரப்பு செய்திகள் வலியுறுத்தியுள்ளன. 2020 இல் 300 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் 2022 இல் 251 மில்லியன் கிலோகிராம் தேயிலையே உற்பத்தி செய்யப்பட்டது. என்றபோதும் தொழிலாளர்களின் நலன்களுக்கு தொடர்ந்தும் வலுசேர்த்து வருவதாக கம்பனிகள் தெரிவிக்கின்றன.




பெருந்தோட்டக் கம்பனிகள் வெளியார் உற்பத்தி முறை தொடர்பில் அதிகமாக வலியுறுத்தி வருகின்றன. இம்முறையின் மூலமாக அதிகரித்த வருவாயை தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பது கம்பனிகளின் கருத்தாக உள்ளது. இதேவேளை தொழிலாளர்கள் காணியுரிமையை பெற்றுக் கொள்வதற்கு அடித்தளமாக வெளியார் உற்பத்தி முறை அமையும் என்று புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே வெளியார் உற்பத்தி முறை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஷ்வரன் பின்வருமாறு கருத்து தெரிவிக்கின்றார். 'தோட்டக் கம்பனிகள் அவுட்குரோ முறைமையில் செல்வதற்கு முற்படுகின்றன. அதாவது ஆயிரம் தேயிலைச் செடிகளை கொடுத்துவிட்டு தொழிலாளர்களிடமிருந்து 50 ரூபாவுக்கு கொழுந்து வாங்கும் முறையை ஏற்கமுடியாது. பெருந் தோட்டக் காணிகள் குத்தகை அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். 10 நாட்கள் ஊழியர் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) என்பவற்றுடன் தோட்டத்தில் வேலை அவசியம். எஞ்சியுள்ள நாட்களில் அவுட்குரோ முறைமைக்கு செல்லலாம். தனியார் உரிமையாளர்களிடமிருந்து வாங்கும் விலைக்கே தொழிலாளர்களிடமிருந்தும் கொழுந்து வாங்கப்பட வேண்டும்' என்று ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள விடயம் இப்போது மீண்டும் பேசுபொருளாகி இருக்கின்றது. சமகால விலைவாசி அதிகரிப்பு மற்றும் வாழ்க்கை செலவு மேலோங்குகை என்பவற்றுக்கு மத்தியில் தொழிலாளர்களுக்கு உடனடியாக சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக 1000 ரூபா வழங்கப்படுவது எவ்வகையிலும் நியாயமாகாது. இன்றைய வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் அவர்களுக்கு 2000 ரூபாவினை வழங்குவதற்கு உரிய தரப்பினர் முன்வர வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

### ஜனாதிபதியின் கோரிக்கை

இதேவேளை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான புதிய கூட்டு ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ளுமாறும், தோட்டத் தொழிலாளர்கள் கோரும் குறைந்த பட்ச நாளாந்த சம்பளம் 1700 ரூபாவை வழங்குதல் அல்லது அதிகரிக்கப்படும் சம்பளம் குறித்து தமக்கு அறியத்தருமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோட்டக் கம்பனிகளின் பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். எனினும் கம்பெனிகள் இக்கோரிக்கைக்கு மறுப்பு தெரிவித்திருந்த நிலையில் 1700 ரூபா சம்பள உயர்வை வழங்குவது சாத்தியமற்றது என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எவ்வாறெனினும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நெருக்கீடு உச்சமடைந்து வரும் நிலையில் ஏனைய துறைகளின் பாதிப்பும் இதனால் மேலோங்கியுள்ளது. இவைகளை கருத்தில் கொண்டு நியாயமான சம்பள அதிகரிப்பை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க அரசியல், தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும்.

• • •

**அணுவாயுதப் ... தொடர்ச்சி ...**

மேற்குலக ஊடகங்கள் தாராளமாக முன்வைத்தன. பயிற்சிபெற்ற படையினரும் ரஸ்யாவிடம் இல்லை எனவும் கூறப்பட்டது.

அதாவது இரண்டாம் உலகப்போரில் இடம்பெற்ற நோமண்டி தரையிறக்கம் போல உக்ரைனின் ஊடறுப்புத் தாக்குதல் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மறுவளமாக முன்னணி நிலைகளை எந்த காரணம் கொண்டும் இழக்கவேண்டாம் என்ற உத்தரவுகளை பூட்டின் தனது கட்டளை அதிகாரிகளுக்கு வழங்கியிருந்தார். போர்க்களத்தில் உக்ரைனின் வெற்றி நிச்சயம் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரக் கொள்கைகளுக்கான தலைவர் ஜோசப் போரல் 2022 ஆம் ஆண்டு ஏப்ரலில் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஊடறுப்புத் தாக்குதல் வெற்றிபெறவில்லை. உக்ரேன் அதிக இழப்புக்களை சந்தித்தது. உக்ரைனின் பிரதம தளபதி ஜெனரல் சலுஸ்னியும் பதவியில் இருந்து அகற்றப்பட்டார். இந்த நிலையில் தற்போது ஐரோப்பா மீது ரஸ்யா படையெடுக்கப்போகின்றது என்ற கருத்துக்களை மேற்குலக ஊடகங்கள் பரப்பிவருகின்றன.

பனிப்போரின் வெற்றிக்கு பின்னர் அத்திலாந்திக் கடலின் இருபுறமும் உள்ள கூட்டணி அதிக நம்பிக்கையை தம்மீது வைத்துவிட்டன. தம்மை யாரும் வெற்றிகொள்முடியாது என்ற நம்பிக்கை தான் அது. தமது பிரச்சாரத்தின் மீது தான் மேற்குலகம் அதிக நம்பிக்கை வைத்துள்ளது. அது ஹறிப்போட்டர் கதையை போலவே அனைத்துலக உறவுகளைப் பார்க்கின்றது. அதாவது தூய சக்தி ஒன்று பேய்களை விரட்டுவது போன்றது. உண்மையான உலகத்தில் இருந்து அவர்கள் எவ்வளவு தூரத்தில் உள்ளனர் என்பதை இது காட்டுகின்றது.



ரஸ்யா படையெடுக்கப்போகின்றது என்பதை நம்பும் சில ஐரோப்பிய நாடுகள் தாங்கள் முதலில் ரஸ்யாவை தாக்க நினைக்கலாம். ரஸ்யாவுடன்- நேட்டோ மோதும் என அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்ட்டின் அண்மையில் தெரிவித்த கருத்தையும் நாம் புறக்கணிக்க முடியாது.

அதாவது தற்போதைய மேற்குலக ஆட்சியாளர்களின் நிலையை மக்கள் அறிவதால் உக்ரேன் போர் தற்போது அமெரிக்காவிற்கும் அதன் கூட்டணி நாடுகளுக்கு அதிக அழுத்தங்களை தோற்றுவித்துவருவதைத்தான் இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன. கூரிய ஆயுதத்தை காதிதப்பைக்குள் மறைக்கமுடியாது என்பதைப்போல அவர்களின் பொய்கள் அம்பலமாகி வருவதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் அணுவாயுதப்போர் ஒன்று ஏற்படுவதற்கு முன்னர் அதனை ஏற்படுத்த முனையும் அரசியல் தலைவர்களில் பலர் தமது அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டுவிடலாம் என்ற நம்பிக்கை மட்டும் தான் தற்போது உலக மக்களிடம் எஞ்சியுள்ளது. இது அவர்களுக்கு மகிழ்ச்சி தராதுவிட்டாலும் உலக மக்கள் தப்பி பிழைப்பதற்கான ஏதுநிலைகளை ஏற்படுத்தும்.

• • •

## சாந்தனின்... தொடர்ச்சி ...

இவ்வாறான முகாம்கள் அமைக்கப்பட்டதற்கு ஒரு வரலாறு உண்டு. 1983 தொடக்கம் இலங்கைத் தீவிலிருந்து கடல்கடந்து வந்து தமிழகத்தில் அடைக்கலம் புகுந்த இலட்சத்துக்கு மேற்பட்டவர்களில் பலரும் (கிட்டத்தட்டப் பாதிப் பேர்) மண்டபம் முதலான ஏதிலியர் (அகதி) முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். மறு பாதிப் பேர் காவல்நிலையப் பதிவுடன் வெளியில் தங்கிக் கொண்டனர். முகாம்களில் தங்க வைக்கப் படுகிறவர்களில் போராளிகளும் உள்ளனர் என்று காரணங்காட்டி அவர்களுக்காக சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட் டன. வெவ்வேறு போராளிக் குழுக்கள் இடையே மோதல் ஏற்படக் கூடாது எனக் கருதி விடுதலைப் புலிகள், இபிஆர்எல்எஃப் போன்ற குழுக்களுக்குத் தனித்தனி முகாம்கள் அமைக்கப்பட்டன.

இந்த முகாம்களில் நீதித் துறை ஆணை இல்லாமலே எவரையும் அடைக்க முடிந்தபடியால், காவல்துறையினர் குற்றச்சாட்டும் வழக்கு உசாவலும் இல்லாமல் சிலரையும், சிறைத் தண்டனை கழித்து விடுதலையாகி வந்த சிலரையும்... வரைமுறையே இல்லாமல் எவரை வேண்டுமானாலும்... சிறை வைப்பதற்கு இந்த முகாம்களைப் பயன்படுத்திக்கொண்டனர்.

சிறப்பு முகாம் ஏற்பாட்டுக்கு எதிராகவும், சிறப்பு முகாமில் வைக்கப்பட்டவர்களின் விடுதலை கோரியும், முகாம்வாசிகளின் நல உரிமைகளுக்காகவும் முகாமுக்குள்ளேயே பல முறைபட்டினிப் போராட் டங்கள் நடத்தப்பட்டன. வெளியிலும் ஈழ ஆதரவு அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும் ஆர்ப்பாட்டம் செய்தன. இதனால் அடுத்தடுத் துப் பல சிறப்பு முகாம்கள் மூடப்பட்டு விட்டன. கடைசியாக எஞ்சியிருப்பது ஒரு முகாம் அதுவே திருச்சிராப்பள்ளி சிறப்பு முகாம். இந்த முகாமிலேதான் சாந்தனும் முருகனும் இராபர்ட் பயசும் ஜெயக்குமாரும் வைக்கப்பட்டனர்.

சிறையில் அடைக்கப்பட்டால், தண்டனை எதுவானாலும் விடுதலை நாள் என்ற ஒன்று உண்டு. சிறப்பு முகாமில் யாருக்கும் விடுதலை நாள் தெரியாது. சிறைப்பட்டவர்களுக்கு நேர்காணல் போன்ற பல உரிமைகள் உண்டு. ஆனால் சிறப்புமுகாம் வாசிகளுக்கு எந்த உரிமையும் உறுதி செய்யப்பட்டதன்று. மாவட்ட ஆட்சித் தலைவரும் முகாம் அதிகாரிகளும் வைத்ததுதான் சட்டம். சட்டத்தின் ஆட்சி என்பதெல்லாம் கிடையாது. பல வகையிலும் சிறையை விடவும் மோசமானது சிறப்பு முகாம். இதெல்லாம் கண்ணுக்குத் தெரிந்த செய்தி.

கண்ணுக்குத் தெரியாத செய்திகளில் முதன்மையானது: ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை தமிழகக் காவல்துறையின் கியூ பிரிவு சொன்னதைத்தான் அரசு நிர்வாகம் செய்கிறது. இந்த கியூ பிரிவு சிறிலங்கா உளவுப் பிரிவோடு நெருங்கிய தொடர்பில் உள்ளது. இந்த இரு பிரிவுகளும் தமக்குள் தகவல் பரிமாற்றம் செய்து முகாம்வாசிகளின் வாழ்வைத் தீர்மானிக்கின்றனர். இரண்டாவதாக, இந்திய அரசின் அயலார் வட்டாரப் பதிவு அலுவலகம் (Foreigners Regional Registration Office) சாஸ்திரி பவனிலிருந்து இயங்குகின்றது. இது இந்திய உள்துறை அமைச்சர் அமித்சாவின் நேரக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. அயல் நாடுகளிலிருந்து இந்தியா வருகிறவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் இந்த அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பது விதி. இந்த விதி சாந்தன் உள்ளிட்ட நால்வருக்கு எப்படிப் பொருந்தும்?

இவர்கள் 32 ஆண்டுகளாக இந்தியாவில் சிறைப்பட்டிருந்தவர்கள், இந்தியாவின் தலைமை நீதிமன்றத்தால் சட்டப்படி விடுதலை செய்யப் பெற்றவர்கள். இவர்கள் மீது அயலார் வட்டாரப் பதிவு அலுவலருக்கு சட்ட அதிகாரம் எதுவும் இல்லை. இந்த அலுவலரின் தலையீட்டைத் தமிழக அரசு ஏற்க வேண்டிய தேவையே இல்லை. சாந்தன் முதலானவர்களில் யாராவது தமிழ்நாட்டிலேயே தங்க விரும்பினால் அவர்களை வழக்கமான அகதி முகாமில் தங்க அனுமதித்து விட்டு அவர்களின் விண்ணப்பத்தை அரசு ஆய்வு செய்யலாம். அவர்களில் யாராவது இலங்கை திரும்ப விரும்பினால் இலங்கைத் தூதரகத்திற்கு விண்ணப்பிக்கலாம். வேறு அயல்நாடு செல்ல விரும்பினால் அதற்கான வசதி செய்து கொடுக்கலாம். இந்தச் செயல்வழிகளுக்கு ஒருசில நாள் ஆகுமென்றால் அதுவரை சிறப்புமுகாமில் விருந்தினர்களாக (Guests in custody) இருக்கச் சொல்லியிருக்கலாம். ஆனால் நடந்தது என்ன?

உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப் பெற்றவர்கள் 15 மாதங்களுக்கு மேல் சட்டப் புறம்பாக அடைத்து வைக்கப்பட்டனர். இதனால் கடுமையாக உடல் நலிவுற்றனர். உரிய சிகிச்சை உரிய காலத்தில் வழங்கப்படவில்லை. சாந்தன் கொடிய கல்லீரல் நோயால் தாக்குண்டார். தாய் மண்ணுக்கும் தாய்மடிக்கும் மீள்வதற்கான சட்டப் போராட்டத்தில் வெற்றியும் கிடைத்தது. காலையில் அவர் பறக்கவேண்டும் என்ற நிலையில் முந்தைய இரவே கூட்டிலிருந்து உயிர் பறந்து விட்டது.

அவருக்காக ஆவலோடு காத்திருந்த அன்னைக்கு அவரது உயிரற்ற உடலைத்தான் தமிழ்நாட்டால் அனுப்பி வைக்க முடிந்தது. ஈழத்தாய் மீண்டும் எம்மை மன்னிப்பாளாக!

• • •

## மத்திய கிழக்கின்... தொடர்ச்சி ...

### பன்னாட்டு சமூகத்தின் வெளிப்பாடுகள்

இவை இப்படியிருக்க, காஸாவின் மனிதாய நெருக்கடி, குறிப்பாக அதன் தென் பகுதியில் நாளுக்கு நாள் மிகவும் மோசமடைந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 1.5 மில்லியன் எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த பாலஸ்தீனர்கள் றாவாவின் முகாம்களில் வசித்துவரும் அதே நேரம், காஸாவின் வடக்கு மற்றும் மத்திய பிரதேசங்கள் முற்று முழுதாக வெறுமையாக இருக்கின்றன. வெளியுலகத்தோடு அனைத்துத் தொடர்புகளையும் முற்றாக இழந்திருக்கின்ற பாலஸ்தீன மக்கள், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படும் மனிதாய உதவிகளில் தங்கியிருக்கிறார்கள். இவ்வாறான ஒரு பின்புலத்தில் காஸாவில் ஒரு தரைத் தாக்குதலை மேற்கொள்ளும் நெத்தன்யாகுவின் திட்டத்தை பன்னாட்டுச் சமூகம் பலமாகக் கண்டித்திருக்கிறது.



“றாவாவை முற்றுகையிடும் திட்டத்தை தன்னால்ஏற்றுக்கொள்ளமுடியாது” என்றுபிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்றோன், இஸ்ரேல் தலைமைக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். நம்பத்தகுந்ததும், நடைமுறைச் சாத்தியமும் உள்ள ஒரு திட்டம் இல்லாமல், தரைத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்வது இயலாத காரியம் என்று அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ஜேக் சளிவன் (Jake Sullivan) கருத்துத் தெரிவித்திருக்கிறார். “றாவாவில் ஒரு முழு அளவிலான தரைத் தாக்குதலை இஸ்ரேல் மேற்கொள்ளுமாக இருந்தால், அதன் விளைவுகள் பயங்கரமானதாக இருக்கும்” என்று மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையாளர், வோல்க்கர் ரூக் (Walker Turk) சுட்டிக்காட்டியிருக்கிறார். றாவா நகரத்தின் மேல் இஸ்ரேல் முன்னெடுக்கக்கூடிய ஒரு தாக்குதலிலிருந்து பாலஸ்தீன மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றத்தை (International Court of Justice) தென் ஆபிரிக்கா கோரியிருக்கிறது. பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றம் இக்கோரிக்கையை நிராகரித்திருக்கிறது.



இஸ்ரேல்மேற்கொண்டுநடவடிக்கைகளை எடுக்குமாக இருந்தால், கெய்றோ மற்றும் ரெல் அவிவ் ஆகிய இரண்டுக்குமே நன்மை பயக்கின்ற பொருண்மிய உறவுகளுக்கு ஆபத்து ஏற்படலாம். அதுமட்டுமன்றி, அவ்வாறு நடைபெறும் பட்சத்தில், இரண்டு நாடுகளும் போரில் ஒன்றோடொன்று மோதக்கூடிய ஆபத்தும் ஏற்படும். உலக ஊடகங்கள் இந்த விடயம் பற்றி பல்வேறு ஆரூடங்களைத் தெரிவித்து வருகின்றன. அரபு உலகத்தில் மிகவும் பலமான இராணுவத்தை தன்னகத்தே கொண்டிருக்கின்ற எகிப்து, தமது பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக, காஸாவுடனான அதன் எல்லைக்கு, மேலதிக இராணுவ உபகரணங்களை அண்மையில் அனுப்பிவைத்துள்ளதாக சில ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன. றொயிட்டசின் (Reuters) கருத்துப்படி, 40 தாங்கிகள் எல்லைக்கு நகர்த்தப்பட்டிருப்பதாகவும், ஏவுகணைப்பாதுகாப்புக் கட்டமைப்புகள் அங்கே நிறுவப்பட்டிருப்பதாகவும் வதந்திகள் உலா வருகின்றன. ஆனால், இவ்வாறான கருத்துகளுக்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை முன்வைக்கப்படவில்லை. அவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அவை மேற்கொள்ளப்பட்ட காம்ப் டேவிட் ஒப்பந்தத்துக்கு எதிரானதாக அமையும்.

இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் றாவா நகரத்தில் தாக்குதலை முன்னெடுக்குமாக இருந்தால் அதற்கான எகிப்தின் பதிலடி எப்படியிருக்கும் என்ற யாரும் எதிர்வுகூறமுடியாது. பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காகவும், அவர்களது பிரதேசத்தை பேணிப் பாதுகாக்கவும் கெய்றோ கடுமையாகப் போராடி வந்திருக்கின்ற போதிலும், அண்மைக்காலங்களில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையே ஒரு நடுவராகவே எகிப்து இதுவரை செயற்பட்டு வந்திருக்கிறது. இருப்பினும் தற்போதைய நிலைமை மிகவும் ஆபத்து நிறைந்ததாகவே தோற்றமளிக்கிறது. இஸ்ரேலுடன் உறவுகளைச் சீர்ப்படுத்திய முதல் நாடாக எகிப்து திகழ்கின்ற போதிலும், இந்த உறவுகளில் நின்று வெளியேறும் முதல் நாடாகக்கூட அது மாறக்கூடிய சூழல் நிலவுவதை மறுக்க முடியாது.

**நன்றி: www.rt.com**

## வடக்கு கிழக்கு... தொடர்ச்சி ...

பிரச்சினை, மீனவர்களின் பிரச்சினை போன்றவற்றுக்கு இன்னமும் தீர்வு கிட்டவில்லை. இவற்றுக்கு எவ்வித பதிலையும் வழங்காது அரசாங்கம் கள்ளமௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது” என்று கூறினார்.

## சிறிய குள ... தொடர்ச்சி ...

பொருளாதார, அரசியல் சூழல் காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

மண்டக்கல்லாறு, குடமுருட்டி, செம்மங்குன்று பகுதிகளால் நீர் கடலுக்கு செல்கிறது. இதை மறித்தே இத்திட்டம் வரையப்பட்டது. மண்டக்கல்லாறு முதல் குடமுருட்டி வரை இணைத்து 20 கிலோமீட்டர் கட்டு அமைக்கப்பட்டு பூநகரிக்குளம் உருவாக வுள்ளது.

இதற்கிடையில் காணப்படும் 11 குளங்கள் இத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளது. ஏறத்தாழ 9000 ஏக்கர் அளவில் குறித்த குளம் அமையவுள்ளது.

இக்குளம் அமைக்கப்படும் சமவேளையில், குளத்தின் நடுவின் 700 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய மின் உற்பத்தி நிலையம் அமையவுள்ளது. 1280 ஏக்கர் கொண்ட பிரதேசத்தில் சோளர்கள் பொருத்தப்படவுள்ளது. இதன் மூலம் நாட்டின் மின் உற்பத்தியில் பெரும்பகுதி இத்திட்டத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

மேலும், 4.5 அடி உயரமாக உயர்த்தி குளத்தின் அபிவிருத்தி ஆரம்பிக்கப்படும். ஆனாலும் நீர்பாசன திணைக்களம் அதன் அளவு தொடர்பில் கூறுவார்கள். அதன் பின் குறைப்பது அல்லது கூட்டுவது தொடர்பில் முடிவு எடுக்கப்படும்.

குறித்த குளம் பூர்த்தியாகும் போது 10 MCM நீரை தேக்க முடியும் என கூறப்படுகிறது. இதன் மூலம் 20 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய முடியும் எனவும் கூறப்படுகிறது.

மழைநீரை சேமிப்பதன் மூலம் கடல்நீர் உள் வருதல், நிலத்தடி உவர் நீர் மாறும், கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை, காட்டு விலங்குகளின் வருகை, பச்சை புற்கள், புதிய காடுகள் உருவாகுதல் உள்ளிட்ட நன்மைகளும் உருவாகும் என கூறப்படுகிறது.

அத்துடன், சுற்று கட்டுகள் அமைப்பதால் வயல் நிலங்களுக்கு நீர் சென்று அழிவுகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் திட்டம் வரையப்பட்டுள்ளது. காட்டு விலங்குகள் நீர் தேடி செல்கின்றமையால், காட்டுப் பகுதிகளில் கட்டுகள் மேற்கொள்ளப்படாது.

குடமுருட்டி குளத்தின் கட்டுகள் பலமில்லாதுள்ளது. அவற்றை புதிதாக அபிவிருத்தி செய்யப்படும். இது தவிர, நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டத்திற்கு மேல் பகுதிகளில் உள்ள குளங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். மண்டக்கல்லாறு பகுதியிலும் புதிய கட்டு அமைக்கப்படும்.

இத்திட்டத்தில் வனப் பகுதியும், 38 ஏக்கர் வயல் நிலம் உள்வாங்கப்படும். ஆனாலும் புதிய வயல் நிலங்கள் உருவாக்க முடியும். புதிய வயல் நிலங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமைப்படுத்தி வழங்க முடியும்.

அத்துடன், 10 ஆயிரம் ஏக்கர் ஏனைய விவசாயம் செய்ய முடியும். தற்போது கடல் நீர் உள்வருகை காணப்படுகிறது. இதனால் பல ஏக்கர் வயல் நிலங்கள் கைவிடப்பட்டுள்ளது. அந்த பகுதிகள் குறுகிய காலத்தில் பயிர்ச் செய்கை நிலங்களாக மாறும்.

அப்பிரதேசங்களில் ஏற்பட்ட உவர் பரவல் காரணமாக மக்கள் வெளியேறியுள்ளனர். இத்திட்டத்தினால் 2, 3 வருடங்களுக்குள் மக்கள் மீண்டும் திரும்புவர். இவ்வாறு பல நன்மைகள் இத்திட்டத்தில் உருவாகவுள்ளது என இன்றைய திட்டஅறிமுகத்தில் கூறப்பட்டது.

• • •

## யாழ். இந்திய ... தொடர்ச்சி ...

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்திற்கு முன்பாக இழுவை மடி தொழிலுக்கு எதிரான போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தோம். அதற்கான எந்த ஒரு தீர்வுகளும் இந்திய துணை தூதரகத்தால் எங்களுக்கு பெற்றுத் தரப்படவில்லை.

இந்தியத் துணைத் தூதரகத்திடம் நாங்கள் மகஜரை கொடுத்துள்ளோம். அவர்கள் இன்று வரை எங்களுக்கு பதில் தரவில்லை என்றால், இந்தியத் துணைத் தூதரகமானது யாழ்ப்பாணத்தில் விசா கொடுப்பதற்கு மட்டும் தான் இருக்கிறது. எங்களுக்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை.

இனிவரும் நாட்களில் நாங்கள் இந்திய துணை தூதரகத்திற்கு முன்பாக தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி ஏற்படும். அவர்களது சேவைகளை முடக்க வேண்டிய கட்டம் ஏற்படும். ஏனென்றால் இவர்கள் மக்களுடைய பிரச்சினைகளை இது வரை இந்திய நாட்டு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லவில்லை. இது எமக்கு மிகவும் கவலையை அளிக்கிறது. எனவே இந்தியத் துணைத் தூதரகம் மத்திய அரசின் பதிலை எமக்கு கூற வேண்டும்” எனவும் தெரிவித்தார்.

## ஐரோப்பாவில் ... தொடர்ச்சி ...

ஆரம்பமாகியதும் 2022 ஆம் ஆண்டு ரஸ்யா இந்த அணுஉலையை கைப்பற்றியிருந்தது. எனினும் அதனை கைப்பற்ற உக்ரைன் பல முயற்சிகள் எடுத்தபோதும் அது கைகூடவில்லை. தற்போது போரில் உக்ரைன் படையினர் பின் வாங்கிவருவதால் மீண்டும் அணு உலையை அவர்கள் தாக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. ஐரோப்பாவில் உள்ள அணு உலைகளில் மிகவும் பெரிய அணுஉலையான இந்த நிலையம் தாக்கப்பட்டால் ஐரோப்பா மிகப் பெரும் அனர்த்தத்தை சந்திக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

## வெடுக்குநாறி ... தொடர்ச்சி ...

**பொலிஸாரின் அத்துமீறல்**

பொலிஸாரின் கட்டளையை மீறும் பட்சத்தில் குறித்த நபர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என தெரி வித்திருந்தனர்.

இருப்பினும் ஆலய நிர்வாகத்தினர் பூஜை நிகழ்வுகளை முன்னெடுத்திருந்ததுடன் அன்ன தானம், பொங்கல் மற்றும் பூஜை பொருட்கள் ஆகியவற்றை பொலிஸார் அப்புறப்படுத்தியுள்ளனர்.

இதனால் பூஜை வழிபாடுகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் பொலிஸார் எடுத்துச்சென்றுள்ளனர்.

## ரணிலை ஆதரிப்ப ... தொடர்ச்சி ...

இப்போது ஆட்சி அமைப்பது அவசியமில்லை. அவசரமுமில்லை. தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளக் கூடிய அரசாங்கம் ஒன்று அமைவதுதான் அவசியம் என்பதுதான் மகிந்தவின் உபாயம். அதற்கு ரணில் அதிகாரத்தில் இருப்பதுதான் தமக்கு நல்லது என அவர் கருதுகிறார்.

ரணிலைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினரின் - குறிப்பாக தமிழ் மக்களுடைய வாக்குகள் கணிசமாக தமக்கு கிடைக்கும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதற்கேற்றவகையில், சிலவற்றைச் செய்வதற்கு அவர் திட்டமிடுகின்றார். குறிப்பாக பொலிஸ் அதிகாரம் இல்லாத 13 ஆவது திருத்தம், காணி விடுவிப்பு போன்ற சிலவற்றை அவர் நடைமுறைப்படுத்தப்போவதாக அவர் சொல்லலாம். அதாவது, சிங்களத் தரப்பில் எதிர்ப்பைச் சம்பாதிக்காமல் சில வாக்குறுதிகளை அவர் வழங்கலாம்.

ராஜபக்ஷக்களின் ஆதரவு அவருக்கு அவசியமாக இருந்தாலும், அதனை அவர் பகிரங்கமாகக் கோரமாட்டார். அவர்களுடைய ஆதரவுடன்தான் தான் களத்தில் இறங்குவதாகக் காட்டிக்கொள்ளவும் மாட்டார். அரசியலைவிட, பொருளாதாரம் குறித்துத்தான் அவர் அதிகளவுக்கு கவனத்தைச் செலுத்துவார். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றியிருக்கும் அதேவேளையில், இந்த நிலை தொடர்வதற்கு தான் தொடர்ந்தும் இருப்பது அவசியம் என்பதுதான் அவரது பரப்புரைகளின் சாராம்சமாக இருக்கும்.

இப்போது, பசில் நாடு திரும்பியிருக்கும் நிலையில் முக்கியமான பேச்சுக்கள் கொழும்பில் இரகசியமாக நடந்துவருகின்றன. அவை குறித்த பரபரப்பான தகவல்களை அடுத்துவரும் வாரங்களில் எதிர்பார்க்கலாம்.

• • •

## சீனாவில் ... தொடர்ச்சி ...

பங்குச்சந்தை பெறுமதியும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 19 விகிதத்தில் இருந்து 15.7 விகிதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. அதாவது இரண்டாவது இடத்தில் இருந்து 4 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. அதேசமயம் கூவாவேயின் பங்குச்சந்தை 9.4 விகித்தில் இருந்து 19.5 விகிதமாக அதிகரித்துள்ளது.

கூவாவேவ் நிறுவனம் அமெரிக்காவின் தடை காரணமாக கடும் பின்னடைவை கடந்த வருடங்களில் சந்தித்தபோதும், அது Mate 60 என்ற புதிய தொலைபேசியை அறிமுகப்படுத்தியதில் இருந்து அதன் விற்பனை மிகவும் அதிகரித்து வருகின்றது.

## இந்திய மீனவ ... தொடர்ச்சி ...

பட்டுள்ளார்கள். இந்தியா ராமேஸ்வரத்திலிருந்து இலங்கை கடற்பரப்புக்குள் யாழ்பாணத்தில் அத்துமீறி பிடிக்கின்றார்கள்.

எமது கடலில் உள்ள அனைத்து வளங்களையும் இழுப்பு மடி வலையை பயன்படுத்தி, ரோலரை பயன்படுத்தி பெறுமதி வாய்ந்த வளங்களை சுரண்டி செல்கின்றார்கள்.

குறுகிய காலத்துக்குள் இதனை அவர்கள் அபகரித்து செல்கின்றார்கள் அழிக்கின்றார்கள் இதனால் எமது மீனவர்கள் ரொம்பவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் வந்து தொழில் செய்வதை உடனடியாக தடை செய்ய வேண்டும். அவ்வாறு வருவார்களானால் அவர்களுக்கான தண்ட பணத்தை அரசாங்கம் விதிக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் எங்களுக்கு சலுகை தரும் என்று எண்ணி மீண்டும் மீண்டும் வந்து மீன்பிடிக்கின்றார்கள் இது அனைத்து வளங்களையும் களவாடி செல்வதாக அமைகிறது

இன்று தொழிலில்லாமல் பல நாடுகளுக்கு செல்கின்றார்கள் அங்கும் தொழில் இல்லாமல் இங்கும் கஷ்டப்படுகின்றார்கள். கடல் ரீதியான அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர்கள் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காததால் தான் எமது வளங்கள் அழிக்கப்படுகின்றன.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அனைத்து அதிகாரிகளும் கடலோர திணைக்களங்களின்அதிகாரிகள் அனைவரும் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.